தொல்காப்பிய விழா - 2025

மாணவர்களுக்கான தமிழ்த்திறன் போட்டிகள்

**பேச்சுப் போட்டி: வகுப்பு - 04 (2015-இல் பிறந்தோர்)**

# தொல்காப்பியம்

தமிழ் மொழியில் இன்று எமக்குக் கிடைக்கும் தொன்மையான இலக்கண நூல் தொல்காப்பியம். தமிழரது மொழியியல் வளத்திற்குச் சிறந்த எடுத்துக்காட்டு தொல்காப்பியம். தொல்காப்பியத்தை இயற்றியவர் தொல்காப்பியர். தொல்காப்பியம் ஒரு இடைச்சங்க கால நூலாகும். இந்த நூல், பொது ஆண்டுக்கு முன் 711ஆம் ஆண்டளவில் எழுதப்பட்டது. தொல்காப்பியத்துக்கு முன் பல இலக்கண நூல்கள் இருந்ததாக அறியப்படுகிறது. அவை, கடல்கோள் காரணமாக அழிந்து போயின. தமிழ் மொழி மரபிற்குக் காப்பாக விளங்குவதால் **“தொல்காப்பியம்”** என்று பெயர் பெற்றதாகக் கூறப்படுகிறது.

பண்டைத் தமிழ் நிலத்தின் எல்லைகள், வடக்கே வேங்கடமலை முதல் தெற்கே குமரிமுனை வரை பரந்து இருந்ததை, தொல்காப்பியச் சிறப்புப் பாயிரம்,

> **“வடவேங்கடம் தென்குமரி**
> **ஆயிடைத்**
> **தமிழ் கூறு நல்லுலகம்”**

என்று கூறுகிறது.

தொல்காப்பியம், எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், பொருளதிகாரம் என மூன்று அதிகாரங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு அதிகாரமும் ஒன்பது இயல்களைக் கொண்டுள்ளது. வேறு எம் மொழியிலும் இல்லாதவாறு தொல்காப்பியர், எழுத்துக்கும் சொல்லுக்கும் மட்டும் அல்லாது இலக்கியம் படைப்பதற்கும் இலக்கணம் வகுத்துள்ளார். இதன்மூலம் பழந்தமிழரின் வாழ்வியலை அறியமுடிகிறது. பண்டைத் தமிழர் வாழ்ந்த முறையைப் பாடல்களில் விளக்குவன சங்க இலக்கியங்கள். சங்க இலக்கியங்களின் வாழ்வியல் ஒழுக்கங்களைப் பாடுவதற்கு உரிய இலக்கணம் வகுத்தது தொல்காப்பியப் பொருளதிகாரம். குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என, நில அடிப்படையில், ஒழுக்கங்களை வகுத்து இலக்கியம் படைத்தவர்கள் தமிழரே.

உயிர் எழுத்துக்கள் 12 என்றும், மெய் எழுத்துக்கள் 18 என்றும், ஆக மொத்தம் தமிழில் முதல் எழுத்துக்கள் 30 என்றும் வரையறுத்தது தொல்காப்பியமே. தொல்காப்பியத்தைத் தொடர்ந்து பல இலக்கண நூல்கள் இன்று வரை எழுதப்பட்டு வருகின்றன. ஆயினும், முதல் எழுத்தின் எண்ணிக்கை 30 ஆகவே இன்றும் இருப்பது தொல்காப்பியத்தின் சிறப்பாகும்.

இந்திய மொழிகளுள் “தமிழ் மொழியே” முதல் முதலில் செம்மொழித் தகைமை பெற்ற மொழியாகும். தமிழ் மொழியின், தொன்மை, செழுமை முதலாய சிறப்புகளைத் தாங்கி நிற்பது தொல்காப்பியம். தொல்காப்பியத்தைக் கற்று அதன் சிறப்பை உலகறியச் செய்வோம்.

நன்றி, வணக்கம்.